முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பராசரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.05.2019, சனிக்கிழமை

1. **அருட்பெருஞ்சுடரே அரங்கா**
**அண்ணலே ஞானதேசிகா**
**பொருள்பட அரங்கன் மலரடி**
**புண்ணிய திருவடி தன்னால்**
2. தன்னிலே வணங்கி வரும் மக்கள்
தவபலம் அடைவர் என்று கூறி
மண்ணுலகில் நித்ய பிரசன்ன ஆசி
மொழிகுவேன் **விகாரி தகர் திங்கள்**
3. **திங்களிலே எழுநான்கு திகதி காரி வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 28ம் நாள் 11.05.2019, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு பராசரிஷி யானும்**
இங்கனமே ஓங்கார உலகம்
இனிதே அமைய உரைப்பேன்
4. உரைக்கவே அரங்கன் காட்டும்
உண்மை ஞான நெறியே
கறைகளை போக்கி சடுதி
கலியுகத்தை தூய்மை செய்யும்
5. செய்யவே அரங்கன் துவக்கிய
சேவையெனும் அன்னதானமே
அய்யமற கலிகால துன்பங்களை
அகற்றி பாதுகாப்பு தரும்
6. தருகவே அரங்கன் தருகின்ற
தருமம் ஏற்று உண்பவர்
தருமவழி நடந்து வருபவர்
தருமத்தை செய்து வருபவர் வழியே
7. வழியே ஓங்கார உலக மாற்றம்
வல்லமைபட அமையக் கூடும்
அழியாமை தரும் ஞானமான
ஆறுமுக அரங்க ஞானி தரும்
8. தருகின்ற சன்மார்க்க வழியே
தயவை பெருக்கி வருவதுடன்
ஆறுதலாக மக்களை காத்து
அகிலம் உயர வகை செய்யும்
9. செய்யவே உலக மக்களினி
சேவையாக அரங்கன் தரும்
மெய்ஞான நூல்கள் தன்னை
முழுமை ஞானமாக வருகின்ற

10. வருகின்ற அருட்சுவடிகளை
வழுவாது ஏற்று வாசித்து
தருமம் பெருக்கி வருவதுடன்
தானதருமம் வளர சேவையாக

11. ஆகவே தொண்டு புரிய
அரங்கன் புகழை பரப்ப
யுகமே உயர் மாற்றம் பெறும்
உரைத்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அருட்பெருஞ் சக்திமிக்க அருட்பெருஞ் சுடரே வடிவாகிய அரங்கமகா தேசிகரே அண்ணலே ஞானதேசிகனே. உண்மையுடன் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருமலரடியாம் புண்ணியம்மிக்க திருவடிகளை பயபக்தியுடன் வணங்கி வருகின்ற மக்களெல்லாம் தவம் செய்யாமலேயே தவத்தின் பலனை அடைவார்கள் என்றே அரங்கன் திருவடி பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி முருகப்பெருமானின் ஞானஉலகம் அமைய விகாரி வருடம் சித்திரை மாதம் 28ம் நாள் 11.05.2019, சனிக்கிழமையாகிய இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பராசரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பராசரிஷி.

**ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உபதேசிக்கின்ற ஜென்மத்தைக் கடைத்தேற்ற வல்ல உண்மை ஞானநெறியே இவ்வுலகினில் உள்ள மக்களின் மனமாசுகளை நீக்கி கலியுகத்தினை கலியுக துன்பத்தினை விரைந்து போக்கி தூய்மை செய்யும் வல்லமைமிக்கதாகும்.**

ஆதலினால் அரங்கன் உலக மக்கள் கடைத்தேறிட துவக்கிய மாபெரும் தருமப் பணியான அன்னதான தொண்டினை செய்திடுங்கள். அரங்கன் துவக்கிய அன்னதானமே சந்தேகம் இன்றி கலிகால துன்பங்களை அகற்றி பாதுகாப்பு தருகின்ற வல்லமை உடையதாகும். அரங்கமகா தேசிகரின் அன்னதான பிரசாதத்தை உண்பவர்களும், அன்னதானத்திற்கு தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்பவர்களும் தருமங்களை செய்து வருவதுடன் தருமவழியில் நடந்து வருபவர்கள் மூலமாகத்தான் கலியுக மாற்றம் உண்டாகி முருகப்பெருமானின் ஞானயுக மாற்றம் வல்லமையுடன் உண்டாகும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அருளுகின்ற மகா ஞானமாகிய அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு பெறுவதற்கான மார்க்கமாகிய சன்மார்க்க வழியினில் தடையின்றி செல்லவும், தயவைப் பெருக்கிடவும் மக்களைக் காத்து ஆறுதலாய் வாழ்ந்திடவும் இவ்வுலகம் ஞானத்தில் உயர்வடைந்திடவும் வழிவகை செய்திடும்.

உலக மக்கள் உயர்வடையவே அற்புத சேவையாக அரங்கமகா தேசிகனார் செய்கின்ற ஞானவிளக்கங்களும், ஞானவிளக்கங்களை தாங்கி வருகின்ற மெய்ஞான நூல்களை முழுமையான ஞானமாக வருகின்ற அருட்சுவடிகளை அவரவரும் கருத்துடனும் பயபக்தியுடனும் படித்து தருமங்களை தாராளமாய் செய்து வருவதுடன் தானதருமங்கள் வளர்ந்திட, அரங்கனின் தானதருமப் பணிகளில் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் வருவதுடன் ஆறுமுக அரங்கனின் புகழையும் உலகமெலாம் பரப்பி வர, உலகமே உயர்வான மாற்றங்களை பெறும் எனக் கூறுகிறார் மகான் பராசரிஷி.

–சுபம்–